# தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்

தொகுதி IV. } ரௌத்திரி௵ தை௴ } பகுதி 10

## மந்திரவாதிகளின் மாய வித்தைகள்.

## The Miracles of Magicians.

ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர், B. A. B. L.
தொகுத்தெழுதியது.

நமது தேசத்தில் பண்டைக்காலம் முதல் மாந்திரிகம் வழங்கி வருகிறது. இந்துக்களின் வேதங்களில் ஒன்றாகிய அதர்வ வேதம் மந்திரத்தையும், தந்திரத்தையும் பற்றிக்கூறுகிறது. அக்காலந்தொட்டு இந்நாள் வரையிலும் மந்திரங்களின் ஒரு வகையான வல்லமையைக் கற்றோரும் பிறரும் அங்கீகரித்திருக்கின்றனர். இவைகளின் சக்திக்குக் காரணம் இவற்றின் ஒலியே என்பதும், இவற்றைச் சரிவர உச்சரிக்காவிட்டால் இவற்றின் வல்லமை பெரும்பாலும் குறைந்து போகுமென்பதும், சிலரது கொள்கை. இவற்றை ஒலிக்குங் காலத்து ஒரேவழியில் முழு மனத்தைச் செலுத்தி யாதாயினும் ஒரு விஷயத்தைப் பற்றி அம்மனது ஊன்றி நினைத்து நிலைநிற்பதே இவ்வல்லமைக்குக் காரணமென்றும்; அல்ல,

இம்மந்திரங்களைப் பின் பற்றும் தந்திரங்களால் தான் இவ் வல்லமை ஏற்படுகிற தென்றும் பலர் பலவாறாகக் கூறிவருகின்றனர்.

இதன் உண்மை எப்படி இருப்பினும் இருக்க. இக்காலத்திலும் கூட நமது தேசத்தில் பல பக்கிரிகளும் வேறு வித்தை காட்டிகளும் தமது ஜால வித்தைகளை ஊருராய்க் காட்டிச் சிறியோர்களுக்கும், பெரியோர்களுக்குமே மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் விளைவித்து வருகின்றனர். இவர்கள் காட்டும் மாய வித்தைகள் பலப்பல. அவற்றிற் சில வெறும் கை ஜாலங்கள். நன்கு கவனிப்போரால் கண்டுபிடிக்கத் தகுந்தவைகள். வேறு சில பார்ப்போருக்கு மிகுந்த ஆச்சரியத்தையும் வியப்பையும் உண்டாக்குகின்றன. இவ்வித்தைகளை அவர் எவ்வாறு இயற்றுகின்றனர் என்பது ஊன்றிக் கவனிப்போருக்கும் எளிதில் புலனாவதில்லை.

ஒரு ஐரோப்பிய சாஸ்திரி இவ்விஷயங்களைப் பற்றி மிகவும் சிரத்தையாய் ஆராய்ச்சி செய்தனர் என்றும் அவ்வாராய்ச்சியின் பயனாக அவர் இவ்விந்திரஜால வித்தைகளுள் பலவற்றின் நுட்பங்களை அறிந்தனர் என்றும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை கூறுகின்றது. அதனின்று சில விஷயங்களை இங்கு எடுத்துக் கூறுவோம். அந்தச் சாஸ்திரியாரது கூற்றுச் சரியென்றாவது பிசகென்றாவது கூறப் போதிய துணிவும் ஆதாரமும் எமக்கில்லையாதலால் யாம் ஒருவித அபிப்பிராயத்தையும் தழுவாது அவரது கூற்றை அவர் கூறியவாறே வெளியிடுகிறோம்.

# 1. மாஞ்செடி முளைத்தல்
# Growing the Mango Plant

---

இந்த வித்தையைப்பற்றித் தெரியாதவர் மிகக் குறை. வித்தை காட்டி ஒரு மாங்கொட்டையை பூமியில் நட்டு, அதனின்று ஒரு செடியானது முளைத்துத் தழைத்துப் பூத்துக் காய்ப்பதை நமக்குக் காண்பிக்கிறான். இவ்வித்தை மூன்று விதமாக செய்யப்படுகிறது என்று மேற்கூறிய சாஸ்திரி கூறுகிறார்.

## முதல் முறை

வித்தை காட்டி வெகு ஆடம்பரமாக ஒரு மாங் கொட்டையை எடுத்து யாவர்க்கும் காட்டி, பூமியில் நடுகின்றனன். பிறகு எழுந்து இங்கு மங்கும் நடந்து பற்பல தேவதைகளை அழைப்பதாகப் பாவித்து அநேக மந்திரங்களை ஜபிப்பவன் போல் நடித்து, அந்தக் கொட்டை நட்டிருக்கும் இடத்தின் மேல் ஒரு துணியை விரித்து, அதற்குள் தனது கைகளைவிட்டு அந்த இடத்தை மெதுவாகத் தட்டிக் கொடுக்கிறான். பிறகு, துணியை எடுத்துக் காட்டும் பொழுது அந்த இடத்தில் ஒரு சிறு செடி முளைத்திருப்பதைக் காண்கிறோம்.

பின்னொரு தரம்துணியால் மூடி, கையால் தட்டி, முணுமுணுத்து, துணியை அவன் எடுத்த உடன் காயும் பூவுமாய் ஒன்றரை அடி உயர முள்ள அழகிய செடி காணப்படுகிறது.

மேற்கூறியசாஸ்திரி இதன் நுட்பத்தை எளிதில் அறிந்து கொண்டனராம். இதில் மந்திரமுமில்லை,மாயமுமில்லை.வித்தை

காட்டி முன்னதாகவே இச்செடிகளை தயார் செய்து ஒளித்து வைத்து கொண்டிருக்கிறனென்றும் அப்போதைக் கப்போது அந்தந்தச் செடிகளைத் துணிமறைவில் எடுத்து வைத்து நடு கிறான் என்றும் அவர் அறிந்தனராம். பிறகு நட்டம் இது தான் என்று வித்தை காட்டியிடம் சொல்ல, அவன் சாஸ்திரி யின் அவ நம்பிக்கையைப்பற்றி வருத்த முற்று, பிறகு சந் தேகம் ஏற்படவேண்டிய காரணம் இன்ன தென்று வினவி, தனது கைகளைத் துணியின் மறைவில் வைத்துக்கொண்டு வேலை செய்வதே சந்தேகத்தை உண்டாக்கிய தென்று அறிந்து, அவ்வாறு உண்டாய சந்தேகம் நீங்குமாறு பின் னொரு முறை மாஞ்செடியை முளைக்கச் செய்வதாக ஒப்புக் கொண்டானும்.

## இரண்டாவது முறை

மறுபடியும் அவன் ஒரு மாங்கொட்டையை யெடுத்துப் பூமியில் நட்டு மெல்லிய தொரு துணியால் அதை மூடி முன் போலவே அநேக மந்திரங்களை ஜபித்தான். பிறகு தனது கைகளால் துணியின் மேல் புறத்தை இலேசாகப் தட்டிக் கொடுத்தான். அவனுடைய ஆள்களில் ஒருவன் ஒரு குடத் தில் தண்ணீர் கொண்டு வந்தான். மந்திரவாதி அதை வாங்கி முணுமுணு என்று ஜபித்துக்கொண்டே மெல்லெனக் கொஞ் சம் கொஞ்சமாக அத்தண்ணீர் முழுமையையும் துணியின் மேல் கொட்டினான். இன்னும் ஒரு குடம் ஜலம் துணியின் மேல் சாக்கிரதையாய் விடப்பட்டது. துணியின் அடியி லிருந்து ஏதோ ஒன்று துணியைச் சிறிது தூக்கியது. இன் னொரு குடம் நீர் விட்டு மந்திரிக்கவும் துணியின் நடு மூன் றங்குலம் வரை உயர்த்தப்பட்டது. வரவரத் துணியின் நடு வானது ஓரடி உயரமாயிற்று. வித்தைகாட்டி இப்பொழுது துணியை மெதுவாகத் தூக்கி அகற்றிவிடவும் அழகிய சிறு

செடி காணப்பட்டது. வித்தை காட்டி செடியைக் கைகளால் தொடவேயில்லை.

இதன் நுட்பத்தையும் அந்த சாஸ்திரி கண்டு பிடித்து விட்டாராம். அதின் நுட்பம் வருமாறும். முன்னதாகவே வாய் அகன்று அடி சிறுத்த குழி யொன்று தோண்டி அதனடியில் பெரிய கார்க்கு (Cork) அல்லது கடைச்சி (Pith) ஒன்று வைத்து அதில்ஒரு சிறுமாங்கொப்பைச் சொருகி வெகு ஜாக்கிரதையாய்க் குழியின் வாயை மண்ணால் மூடிவிடுகிறான். வித்தைகாட்டும் சமயத்தில் மாங்கொட்டையை நட்டபின் துணியின்மேல் கையால் தட்டுவது குழியின்மேலிருக்கும் மேற்கூறிய மண்மூடியை உடைப்பதற்காகவே. ஜலம் விட விட ஜலத்தில்மிதக்கும் கார்க்கு செடியையும் தூக்கிக்கொண்டு உயரக் கிளம்பி விடுகிறது. மூடி துணியைத் திறந்தவுடன் சேற்று நடுவில் பூவும் காயுமாகச் சிறுமாஞ்செடி காணப்படுகிறது.

வித்தை இவ்வளவுதான் என்று மேற்கூறிய சாஸ்திரி எடுத்துரைத்ததும் வித்தைகாட்டிக்கு உண்டான மனவருத்தத்துக்குக் கணக்கில்லை. அவன் வருத்தத்தோடு தலையை அசைத்து "ஐயா ஒன்றையும் நம்ப மாட்டோம் என்கிறீர்களே! நான் இதோ இந்தக் கொட்டையை பூமியில் நட்டு விடுகிறேன். பிறகு அதைத் தொடவுமில்லை, கிட்டக் கூடப் போகவுமில்லை. இதனின்று ஒரு மாஞ்செடியல்ல ஒரு மாமரத்தையே முளைக்கச் செய்கிறேன். பிறகாவது நம்புவீர்கள் அல்லவோ ?" என்றான்.

## மூன்றாவது முறை

மேற்கூறிய வண்ணம் பக்கிரி மாங்கொட்டையை நட்ட பிறகு அவன் தன்னைச்சுற்றி நாலாபக்கங்களிலும் உற்று நோக்

கினான். பிறகு சற்றேறக்குறைய கால்மணி நேரம் வரை தனது கைகளை இங்குமங்கும் வீசிக் கண்களைச் சுழற்றி, முகத்தைச் சுளித்து முணுமுணுத்துக் கொண்டேயிருந்தான். பிறகு கொஞ்சம், கொஞ்சமாக ஆட்டமும், பாட்டமும் குறைந்தது. திடீரெனப் பக்கிரி நிமிர்ந்து நின்று நொண்டு பூவும், கனியும் நிறைந்த இம்மரத்தைப் பாருங்கள் என்று கூவினான். மெய்யாகவே உயர்ந்து வளர்ந்த நல் மரம் ஒன்று அங்கு நிற்கக் கண்டோம். ஆயினும் அம்மரத்தின் இலைகள் காற்றில் சிறிதும் அசைய வில்லை. மேலும் கிட்டப் போகப்போகச்சிறியதாகவும், தூரப் போகப் போக மங்கலாகவும் அம்மரம் தோன்றியது. சாஸ்திரியானவர் திடீரென ஓடி மரத்தைப் பிடிக்கப் பார்த்தார். கையில் ஒன்றுமே அகப்படவில்லை. ஒரு குருவியும் மரம் நின்ற இடத்துக்குக் குறுக்கே ஒரு தடையுமில்லாதது போலவே பறந்தோடிற்று. இதற்குக் காரணம் மந்திரவாதி வசீகரண வித்தையால் (Hypnotism) பார்ப்போர் கண்களைக் கட்டி விட்டது தான் என்று அவர் கூறுகிறார்.

(தொடரும்)

# ஆகாய விமான அபிவிருத்தி.

# The future of the Aeroplane.

---

ஸ்ரீமான் பி. ய. மொழிபெயர்த்தது. *

இந்தியாவில் சாதாரண ஜனங்களைச் சொல்லவேண்டியதில்லை: கற்றமனிதர்களுக்குக்கூட மேல்நாடுகளில் ஆகாய விமான நிர்மாணம் எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்பது தெரிந்திராது. நிகழ்ந்த மகாயுத்தகாலத்தில் இந்தியாவில் சில போர்வீரருறையூர்களில்(Cantonments) ஆகாயவிமானங்கள் காணப்பட்டன. சீதாபுரம், லாஹூர், குவெட்டா, மூல்தான், ராவல்பிண்டி முதலிய இடங்களில் ஆகாய விமானங்கள் பறப்பதைப் பார்க்கும் பாக்கியம் ஜனங்களுக்குக்கிடைத்தது. ஆயினும் அவை ஏறுதல், இறங்குதல் அவற்றின் அமைப்பு முதலியவற்றைப் பார்க்க வெகுசிலருக்கே சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

ஆனல் ஐரோப்பாவில் அப்படியன்று. இங்கிலாந்து, பிரான்சு முதலிய தேசங்களில் ஆயிரக்கணக்காக பலவகைப்பட்ட விமானங்கள் செய்யப்பட்டன. இங்கிலாந்தில் மாத்திரமே பத்துப் பன்னிரண்டு கம்பெனிகள் இவ்விமானங்கள் செய்வதற்காக ஏற்பட்டிருக்கின்றன. சிலமாதங்களுக்குமுன் லண்டன் நகரில் ஹேடன் மைதானத்தில் ஆகாய விமானக் காக்ஷி ஒன்று நடைபெற்றது. அச்சமயம் சிறிதும் பெரிதுமாக 250 வகை விமானங்கள் அங்கு காண்பிக்கப்பட்டன. சுமார்

---

* (இவ்வியாஸம் ஸரஸ்வதி என்ற ஹிந்திமாதாந்தப் பத்திரிகையில், லண்டனிலிருந்து ஓர் இந்தியரெழுதியிருப்பதன் மொழிபெயர்ப்பு).

லக்ஷம் ஜனங்கள் பார்க்கச் சென்றார்கள். நாலுமணிநேரம் காக்ஷி நடந்தது. அப்போது யுத்தங்களில் விமானங்கள் செய்யும் வேலைகள் நன்றாய் விளக்கப்பட்டன. நகரங்களில் வெடிக்குண்டுகளெறிதல், அவற்றால் அங்குள்ள வீடுகள் பற்றி யெரிதல், பிற விமானங்களின்மீது குண்டுபோடுதல், மறைந்திருந்து சத்துரு சைன்னியத்தைக் கவனித்தல், அதன்மீது குண்டுமாரி பொழிதல், கிருத்திரிம மேகங்களில் மறைந்துகொண்டு விமானசமூகங்கள் நகரங்களைத் தாக்குதல், இவையெல்லாம் சகல ஜனங்களுக்கும் நன்றாக விளக்கிக் காண்பிக்கப்பட்டன. ஆகாயத்தில் விமானங்கள் பறந்து விளையாடுவது பார்ப்பவருக்கு வெகுவிநோதமாகவே யிருந்தது. அதிலும் இரண்டுகாக்ஷிகள் மிகவும் அழகாயிருந்தன. ஒரு பெரிய புகைக்கூண்டில் (பலூனில்) மனிதனைப்போன்ற ஒருபோலி உருவம் உட்கார்த்தப் பட்டிருந்தது. அது மேலெழும்பிச் சிறிதுநேரமானதும் அதன்மீது ஆகாயவிமானத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. பலூன் தீப்பற்றி எரிந்துகொண்டு கீழேவரும்போதே சாம்பராய் விட்டது.

இரண்டாவது விளையாட்டு ஒருபெண்ணால் காண்பிக்கப்பட்டது. ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்த ஒரு விமானத்திலிருந்து, அதனின்று தொங்கவிடப்பட்ட ஒரு கயிற்றின் வழியாக அவள் கீழே இறங்கினாள். இறங்கும்போது விமானத்தோடு பிணைக்கப்பட்ட கயிறு காற்றினாலும் விமானத்தின் ஓட்டத்தாலும் அசைந்து ஆடிற்று; கயிற்றைப் பிடித்திருந்த அப்பெண்மணியும் வேகமாயங்குமிங்கும் ஆடிக்கொண்டேயிருந்தாள். ஆனால் இவ்வாட்டத்தினால் அவளிறங்குவதில் யாதொரு தடையுமில்லாமல் சுமார் 1000 அடி உயரத்திலிருந்து அவள் கீழே வருவதைப் பார்த்துக்கொண்டிருந்த ஜனங்களின் மனது துடிதுடித்தது. அவள்க்ஷேமமாய்ப் பூமியில்

குதித்தவுடன் அந்த ஜனங்களுக் குண்டான ஆனந்தத்துக் களவில்லை. மற்றொரு 18 வயதுப்பெண் இவ்விதமாக ஒரு விமானத்திலிருந்திறங்கி இன்னொரு விமானத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த கயிற்றைப் பிடித்து அதன்வழி அவ் விமானத்தின்மீது சிர்ப்பயமாக ஏறிச் சென்றுவிட்டாள். இதைப்பார்த்த ஜனங்கள் காட்சிமுடிந்த வெகுநேரம் வரையில் கரகோஷம் செய்தார்கள்.

இதோடு காட்சி முடிந்துவிடவில்லை. பளிங்கு அரண்மனையில் (Crystal palace) பெரிய பெரிய ஆகாயக்கப்பல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சென்று தங்கள் ஜாதிக்குக் கௌரவத்தைத் தந்த அவற்றையும் அவை செய்த வேலைப்பட்டிகளையும் பார்வையிட்டு உற்சாகமடைகிறார்கள்.

இன்னும், ஒலிம்பியா என்ற பெயர்பெற்ற இடத்தில் விமானக்காட்சி 10 நாள் நீடித்திருந்தது. இங்கிலாந்து, ஸ்காத்லாந்து தேசத்து ஆகாயக்கப்பல் கட்டும் கம்பெனிகளெல்லாம் தங்கள் கப்பல்களின் சிறுமாதிரிகள் (மாடல்கள்) அனுப்பியிருந்தார்கள். ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொருவிதமான விமானங்கள் வைக்கப்பட்டு எல்லாவற்றையும் காணச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. ஜனங்களை ஒவ்வொரு விமானத்திலும் ஏற்றி அதன் அமைப்பையும் விசேஷங்களையும் வருணித்துக் காட்டப்பட்டது. கப்பல்கள் எப்படிக் கட்டப்படுகின்றன; ஆகாயத்திலிருந்து கீழ்ப்பிரதேசங்களின் படங்கள் எப்படி எடுக்கப்படுகின்றன; கம்பியில்லாத் தந்தி எப்படி வேலை செய்கிறது; டெலிபோனல் (டேயொலியினல்) எப்படி சம்பாஷணை நடத்துவது; கப்பல் தீப்பற்றிக்கொண்டால், அல்லது எஞ்சின் கெட்டுப்போய்விட்டால் எப்படித் தப்பித்துக்கொள்

வது; இதுபோன்ற எல்லா விஷயங்களும் வெவ்வேறு இடங்களில் விளக்கப்பட்டன. எஞ்சினீயரிங் கம்பெனிகளும் தங்கள் எஞ்சின்களை அனுப்பியிருந்தன. ஒவ்வொரு கம்பெனியின் ஆட்களும் தங்கள் தங்கள் எஞ்சின்களின் பக்கத்தில் நின்றுகொண்டு அவற்றின் நுட்பத்தைத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்.

அற்பரும் பெரியோரும் சகலரும் காட்சிகாண வந்தனர். நான் போயிருந்த தினத்தில் ஸ்பெயின்தேசத்து அரசனும் காட்சியைக்கண்டு களித்தார். அவரது சாதாரண உடையும், சிரித்த முகமும், சகலஜனங்களுடனும் சேர்ந்துபழகும் சுபாவமும் என் மனத்தைக் கவர்ந்தன.

அக்காட்சியில் நான் கண்டதையெல்லாம் ஒருவியாசத்தில் வருணித்தல் அசாத்தியம். இங்கு சில விசேஷங்களை மட்டும் குறிப்பிடுகிறேன்.

ப்ரிஸ்டல் கம்பெனியிலிருந்து ஆறுவித விமானங்கள் வந்திருந்தன. ஒன்று (Triplane) ட்ரைப்ளேன் அல்லது மூன்று ஜோடி இரக்கைகளுடையது, மற்றது (Biplane) பைப்ளேன் அல்லது இரண்டுஜோடி இரக்கைகளுடையது. ட்ரைப்ளேனை பவனராஜா (வானரசு) என்று கூறலாம். அதில் 16 மனிதர்கள் உட்காரவும் சாமான் வைத்துக்கொள்ளவும் இடமிருக்கிறது. நடுவில் ஆட்கள் போய்வர இடம்விட்டு 16 நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரயாணிக்கும் பக்கத்தில் ஒரு கண்ணாடி ஜன்னல் உண்டு. அதன் வழியாக வெளியேயுள்ள தோற்றங்களைக் கவனிக்கலாம். இப் பவனராஜா ஒருவித ரயில்வண்டி போன்றது. இதில் 4 எஞ்சின்கள் வேலைசெய்கின்றன. ஒவ்வொன்றும் 410 குதிரை வேகமுடையது. இதனால் இதில் தற்காப்புக்கு அதிகவழி இருக்

கிறது. ஒன்றிரண்டு இயந்திரங்கள் கெட்டுப்போனாலும் ஒரு கெடுதியுமில்லை. தங்குதடையின்றி 640 மைல் பிரயாணத்துக்கு வேண்டிய பெட்ரோல் வைத்துக்கொள்ள வசதி யிருக்கிறது. இது 20,000 அடி உயரம்வரை பறக்கும். மணி நேரத்துக்கு 130 மைல் வீதம் ஓடும். தீப்பற்றிக் கொள்ளுமோ என்ற பயத்துக்கு இடமேயில்லாதபடி இது அமைக்கப் பெற்றிருக்கிறது.

ப்ரிஸ்டல் பாலன் என்றது ஒரு மோட்டாருக்குச் சமான மான சிறு விமானம். இதில் கப்பலோட்டியுடன் ஒரு பிரயாணி ஏறிக்கொண்டு பிரயாணம் செய்யலாம். இதன் சாதாரண வேகம் மணிக்கு 70 மைல், சிறு பிரயாணங்களுக்கு ஒருவிமானமும் இதை மிஞ்சாது.

ப்ரிஸ்டல் பாலனை யொத்ததாகச் செல்லக்கூடியது, ஆவரோ பாலன். இது பெரும்புகழ் பெற்றிருக்கிறது: அதற்குத் தகுந்தபடி வேலையும் செய்திருக்கிறது. இது 9,000 அடி உயரத்தில் மணிக்கு 60 மைல் வீதம் ஓடும். 60 மைல் வேகத்தோடு சுலபமாய்ச் செல்லும். 35 நிமிஷத்தில் 700 அடி உயரம் கிளம்பிவிடுகிறது. இதில் மாட்டப்பட்டிருக்கும் எஞ்சின் 35-40 குதிரை வேகந்தான். இதில் ஏறிக்கொண்டு ஹின்ளர் என்பவர் மே மீ 31 உ காலையில் லண்டனிலிருந்து புறப்பட்டு $9\frac{1}{3}$-மணி நேரத்தில் ட்யூரின் வரை, அதாவது 650 மைல்தூரம்,போய்ச்சேர்ந்துவிட்டார். ஆல்ப்ஸ் மலைக்கு மேலாக 10,000 அடி உயரத்தில் விமானம் பறந்தது. இக்கப்பல் ட்யூரினிலிருந்து ரோமுக்கும் திரும்ப ரோமிலிருந்து ட்யூரினுக்கும் சென்று அங்கு சிலநாட்கள் தங்கிவிட்டு மறுபடியும் லண்டன் வந்தது.

சென்ற வருஷம் எயீரியல் டார்பி என்ற பந்தயத்தில் இக்கப்பல் 70 மைல் வேகம் சென்று பரிசு பெற்றது. இவ் வருஷம் மே மாதம் பந்தயத்தில் இரண்டு ஆவரோ பாலன்கள் 200 மைல் வட்டம் சுற்றிவந்தன. ஒன்று 80 மைல் வேகத் தோடும் மற்றது 73 மைல் வேகத்தோடும் பறந்தது. இரண் டுக்கும் பரிசு கொடுக்கப்பட்டது. இவ்வருஷத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால் மார்ட்டின் ஸைட் கம்பெனியின் ஒரு விமானம், 300 குதிரை வேகம் உள்ளது, 78 நிமிஷத்தில் 200 மைல் வட்டமிட்டது. அதாவது மணிக்கு சுமார் 154 மைல் வீதம் சாதாரணமாக ஓடிவிட்டது. இவ்விமானம் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் புறப்படுமாயின் 5,000 மைல் தூரத்தை 33 மணி நேரத்தில் கடந்துவிடும். வழியில் பலஇடங்களில் தங்குவதற்கு 15 மணிநேரம் செலவுசெய்தா லும் இரண்டே தினங்களில் லண்டன் போய்ச்சேர்ந்துவிடும். ஆவரோ பாலனின் ஒரு விசேஷம் என்னவென்றால் ஒரு யந்திரத்தை மாட்டினால் அதைச் சுலபமாய் ஒரு தோணியைப் போல் ஜலத்தில் செலுத்தலாம். இருவர் உட்கார்ந்துகொண்டு தமதிஷ்டம்போல் ஜலத்திலோ காற்றிலோ பிரயாணம் செய் யக்கூடிய இவ்விமானத்தின் விலையும் அதிகமில்லை. 850 பவுன் தான். ஒருமோட்டார்காரின் விலையைவிடச் சற்று அதிகம்.

விக்கர்ஸ் கம்பெனியின் விமானங்களை எவ்வளவு புகழ்ந் தாலும் போதாது. இவை வெகு சிரேஷ்டமானவை. இவை தான் அமெரிக்காவிலிருந்து அயர்லாந்துக்கும், இங்கிலாந்தி லிருந்து ஆஸ்திரேலியாவுக்கும், லண்டனிலிருந்து மத்திய ஆப்பிரிக்காவுக்கும் தடையின்றி யாத்திரை செய்திருக்கின் றன. இவற்றால் 2,000 மைல் பிரயாணங்கள் தங்குதடை யின்றி நடைபெறுமென்றால் வேறு என்ன சொல்லவேண்டும்? ரயில், கப்பல் வழிகளாய் மாதக்கணக்காகப் பிடிக்கின்ற

யாத்திரைகள் இப்பொழுது சில தினங்களில் முடிந்துவிடும். மலைகள், மணற்பாங்குகள், நிர்ஜனப் பிரதேசங்கள் போன்ற, ரயில் போகக்கஷ்டமான, இடங்களை இவ்விமானங்களின் மூலமாக வெகு எளிதிற் கடந்து செல்லலாம்.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு இரண்டு மூன்று தினங்களிலும், இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு 12 மணி நேரத்திலும் ஜனங்கள் போவதென்றால் என்ன ஆச்சரியமாயிருக்கிறது. அப்படி போகக்கூடியநாள் சமீபித்து விட்டது. இன்னும் 2, 3 வருஷங்களில் அது கூடியது ஆய்விடும். 4, 5 வருடங்களில் சகல ஜனங்களுக்கும் அப்படி யாத்திரை செய்யும் சவுகரியம் கிடைத்துவிடும்.

விசாலமான நமது தேசத்தில் ஆகாயவிமானங்கள் இருத்தல் அவசியம். பெஷாவரிலிருந்து பம்பாய், கல்கத்தாவுக்குத் தபால் போக 4 நாள் ஆய்விடுகிறது. காச்மீரத்திலிருந்து ராமேசுவரம் போகவோ இரண்டுவாரம் பிடிக்கிறது. இந் நீண்ட பிரயாணங்களை ஓரேநாளில் செய்யக்கூடுமானால் எவ்வளவோ நன்றாயிருக்கும். கல்கத்தாவிலிருந்து ரங்கூனுக்குப் போக 7 நாளாகிறது — விமானமிருந்தால் சில மணிநேரத்தில் போகக்கூடிய பிரயாணம். உஷ்ணகாலங்களில் டார்ஜீலிங், சிம்லா, குவெட்டா முதலிய ஸ்தலங்களுக்குப் போவது வெகுசுலபமாய்விடும். காச்மீரம், குவெட்டா முதலிய பிரதேசங்களின் பழவர்க்கங்கள் தேசமுழுதும் எளிதில் வந்து சேரும். இப்பொழுது பழங்கள் ஏற்றிப்போகும் ரயில்வண்டிகளில் பிரயாணத் தாமதத்தால் பழங்கள் அழுகிப்போகின்றன. ஆனால் விமானங்களில் புதுப்புதுப் பழம் கொண்டு வரலாம.

ராமேசுவர யாத்திரிகர்கள் ஹரித்துவாரத்தில் ஸ்நாநம் செய்துவிட்டு இன்று புறப்பட்டு மறுநாள் ஸேதுஸ்நாநம்

முடித்துக்கொண்டு மூன்றுநாள் வீடுதிரும்பக்கூடிய காலம் நெருங்கிவிட்டது. பதரீநாத், துவாரகா, ஜகந்நாத் ஆகி புண்ணிய க்ஷேத்ர யாத்திரைகள் தற்சமயம்போல் கஷ்டசாத் தியமாயிராது. அதன்பொருட்டு மாதக்கணக்காய் வீடுவா யிலேயும் அலுவல்களையும் விட்டிருக்கவும் நேராது.

விமானயாத்திரை பரவவேண்டுமானல் சுதேச மன்னர்கள் ஜனங்களின் மனதினின்றும் பயத்தை யகற்றி விமானம் ஓட்டவும் கட்டவும் வழிகாட்ட வேண்டும். பல சமஸ்தானங் களில் மன்னர்கள் சவாரிக்கும் ஜனங்களின் பிரயாணத்துக்கு மாக ஒன்றிரண்டு விமானங்கள் வாங்கிவைத்தால் மிகுந்த லாபமுண்டாகும். 1000 பவுனுக்குமேல் 3000 பவுனுக்குள் நல்ல விமானங்கள் கிடைக்கும் இங்கிலாந்திலே டெய்லி மெய்ல் போன்ற பத்திரிகைகள் லக்ஷம் பவுன் பரிசாக அளித்து விடுகின்றன. ஆஸ்திரேலியா கவர்ன்மெண்டானது 10,000 பவுன் இனும் அளித்திருக்கிறது. நம் தேசமன்னர்கள் இச்சுப காரியத்தில் பங்கு எடுத்துக்கொள்ள மாட்டார்களா? இரண்டு மூவாயிரம் பவுன் அவர்களுக்கு பெரிது ஆகமாட்டாது. சொந்த லாபத்தையும் பிரஜாநுகூலத்தையும் கருதி இம்மா திரியான விஷயங்களில் அவர்கள் பின்வாங்கக்கூடாது.

சில தனிகர்கள் தாமாகவோ அல்லது கம்பெனிகள் சேர்த்தோ இவ்வேலையைக் கையாடுவார்களாகில் நல்லலாப முண்டாகும். அவர்கள் இச்சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது. இப்போதுதான் இவ்வேலை துவக்கமாயிருக்கிறது. கொஞ்ச காலம்போனல் இதையும் ஓர் அந்நிய கம்பெனி கைப்பற்றி விடும். அப்போது இத்தொழிலிலும் நமக்கு இடமிராது.

ஐரோப்பாவில் வெகுசீக்கிரம் காரியம் முன்னேறிவிடும். லண்டனிலிருந்து ஹாலந்து பிரான்சு, ஸ்விட்ஸர்லாந்து தேசங்

ளுக்குத் தினம் இருமுறை விமானப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாய் சார்ஜும் குறைந்துகொண்டு வருகிறது. பிரான்சு முதலிய தேசங்களில் விமானம் வழியாகக் கடிதமனுப்ப 2 ஷிலிங் முத்திரை ஒட்ட வேண்டியிருந்தது. இப்போது சாதாரண லெட்டர்களைவிட 2 பென்சு அதிகம் கொடுத்தால் போதுமானது. இந்தியா மெயிலுக்கும் இதே நியமந்தான். சாயங்காலத்துக்குள் ரெயில் மார்க்கமாய்ப் போகக்கூடாத கடிதங்களைக் கொஞ்சம் அதிகஸ்டாம்பு பதித்துவிட்டால் இரவில் 12 மணி வரை தபாலில் போடலாம். இவ்விதமாகச் சொற்பகாலத்துக்குள் விமானப் போக்குவரத்து வெகு மலிவாய்விடுமென்று நம்பப்படுகிறது.

லண்டனில் பல கம்பெனிகள் விமானயாத்திரை செய்விக்கும் தொழில் எடுத்துக் கொண்டிருக்கின்றன. 1 பவுன் கொடுத்தால் 15 மைல் சுற்றலாம். இந்தியாவிலும் பம்பாய், சென்னை, கல்கத்தா, டில்லி முதலிய பெரிய பெரிய நகரங்களில் ஒன்றிரண்டு விமானங்களை வைத்துக்கொண்டு ஜனங்களைச் சவாரிசெய்வித்தால் சீக்கிரத்தில் பயம்நீங்கிப் பெரிய பெரிய பிரயாணங்கள் செய்யத் தயாராய்விடுவார்கள். அதோடு அநேக இந்தியர்களும் விமானம் ஓட்டக்கற்றுக்கொண்டு விடலாம். ஆனால் ஒரே வருஷத்தில் பல இந்திய வாலிபர்கள் வேலைகற்று விடுவார்கள். இதனால் நமக்குப் பல நன்மைகள் உண்டாகி தேசமுன்னேற்றத்துக்கும் வழியேற்படும்.

பி. ய.

# தில்லைக் கோவிந்தன்.

# Thillai Govindan.

மொழி பெயர்ப்பு

---

## பன்னிரண்டாம் அதிகாரத் தொடர்ச்சி.

---

ஒரு வருஷம் சர்வகலாசாலைப் பரீக்ஷையில் தவறிய பி. ஏ. பட்டம் அடுத்த வருஷம் ஒப்பேறி, பெற்ற பின், என்ன உத்தியோகம் செய்வது என்று தீர்மானிக்க வேண்டியதாயிற்று. என் தகப்பனுர், நான் 'வக்கீல்' ஆகவேண்டுமென்று தூண்டினர்.

ஆனல், அந்த வேலை மனப்பூர்வமாய் எனக்குப் பிடிக்கவில்லை. நேராகப் பொய் புகன்றாலன்றி, அல்லது மெய்யை மறைத்து சாடியாய்ப் பேசினலன்றி, அத்தொழிலினுல் ஜீவனஞ்செய்வது சிலருக்கே சாத்தியமாகு என்று நான் நினைத்திருந்தேன்.

இந்த அருவருப்புக்கு முக்கிய காரணம், என்படிப்பு முறையில் என் வழிப்பட்ட சில அபிப்பிராயங்களே. வாசிப்பவரை விநோதப்படுத்து மென்று அவற்றை இதன் கீழே எடுத்தெழுதுகிறேன்:—

(1). " தலையில் மயிர் குல்லாயும் கழுத்தில் வெண் பட்டயமும் தரித்துகொண்ட வுடன், ஒரு " பவுன் கிடைப்பதற்காக, அவ்வாடம்பரங்கள் இல்லாவிடின் ஒரு இராஜ்ஜியம் கிடைக்கு மென்றாலும் இழிவானதென்றும் கேடுவிளைப்பதென்றும் கருதும் காரியத்தைச் செய்வது ஒருவன் வாக்கு

மூலத்தை நம்புவதோடு மட்டுமல்லாமல், அதன் உண்மை யைத்தான் நேராகவே அறிந்திருந்தும், போலி நியாயங்கள் கூறியும் தீவிரமாய் வற்புறுத்தியும், ஆக்கிரமடைந்து உரக்க எடுத்துரைத்தும், வாக்கு ஜாலத்திற்குத் தகுந்தபடி கைஜா லம்செய்தும், கருத்துக்கேற்ப முகத்தை மாற்றியும்,யோக்கிய னை இந்தச் சாக்ஷியைப் பயமுறுத்தி மிரட்டியும், மற்றவனைக் கலங்கச் செய்தும், வழக்கைக் கேட்கும் மத்யஸ்தர்கள் அந்த வாக்கு மூலத்தை பொய்யென் றெண்ணி ஏற்றுக் கொள்ளாத வண்ணம் செய்யத் தன்னாலியன்ற வளவு ஒருவன் முயன்று வருவது எவ்வளவு அயோக்கியமான காரியம்!

வக்கீல்கள், தங்கள் வார்த்தைகளையும் கோபத்தையுமே வாடகைக்கு விற்பவர்கள்; கக்ஷிக்காரனிட மிருந்து கிடைத்த பணத்திற்குத் தக்கபடி ஆக்கிரஹம் அடைந்து, பெற்றுக் கொண்ட பொருளுக்குத் தகுந்தவாறு அதிகமாயோ மித மாகவோ கடுகடுத்துப்பேசுபவர்கள்.

(3) வக்கீல் மனிதரை நல்லவராக்குவதில்லை, ஆனால், அவனாலான கேடு பிறரை வந்தடைவதில்லை. நம்முடைய கெட்ட சுவபாவத்தால் அவன் வேண்டியிருக்கிறது; நம்மு டைய ஆவசியகமே, அவனைக் கனவானாக்குகிறது.

(4) "எவ்விதப் பயமுமின்றி ஒருவன் தைரியமாய்ப் பொய் புகலக் கூடிய தொழில்"

(5). "இப்படிப்பை (வக்கீலிஷ) ஞானறிவேன். இது என க்குப் பிடித்தமில்லை." சட்டங்கள், எங்குமே உடன் பிறந்து நம்மை வருத்தும் வியாதிகள்; தலை முறைதத்துவம் பற்றி நம்மைத் தொடர்ந்துவரும் சாபமே இது. இவ்வபிப்பிராயங் களுக்கு எல்லாம் எதிர்க்கூற்றாக, "மானுட கலா ஞானங்க

ளுக்குள் முதன்மையாய்ச் சிறந்தவற்றுள் சட்டஞானம் ஒன்று" என்றதோர் பெரியவரின் அபிப்பிராயமும் கூறப்பட்டிருந்தது மெய்யே. ஆனால், அவரும்—தாமும் ஒரு வக்கீலாக இருந்ததால் இவ்விஷயத்தில் பக்ஷபாத மில்லாதவர் என்று சொல்ல முடியாது—அவருங்கூட "சட்டப்படிப்பு எவ்வளவுக் கெவ்வளவு அறிவைத் தூண்டி ஊக்கமடைவிக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு மனதை விசாலப்படுத்தித் தாராளத் தன்மையை யடைவிக்கிறதில்லை; அதிர்ஷ்டவான்களான சிலருக்கு மட்டுமே யல்லாமல் எல்லாருக்கும் அது பொருந்தாது" என்று கூறி யிருக்கிறார். நான் படிப்பாற் சிறந்த உத்தியோகத்திற்கே வாசிக்கவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது. இன்சினீரிங் படிப்பிற்கு வேண்டிய கணக்கு என் மந்த புத்திக்கு எட்டாது என்று, நான் பயப்பட்டேன். பிராமணனுக்கு கொஞ்சமும் தகாததால், வைத்தியப்படிப்பைப் பற்றிப் பேசவே கூடாதென்று என் தகப்பனார் சொல்லிவிட்டார். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாய வேலை செய்வதில் அவ்வளவு பணமும் கிடையாது; எனக்கும் ருசிக்கவில்லை. ஆகையால், கடைசியில், சட்டந்தான் படிப்பது என்றாகி, வாசிக்கவே, பரீக்ஷை வந்ததும் அதில் தவறினேன். இதற்குள் என் மனைவியும் என்னுடன் வாழ வீடு வந்து விட்டாள்; என் தாய் தந்தையர் இல்லைக்குத் திரும்பிப்போய் விட்ட படியால், நாணிப்பாட்டி மனைவிக்குத் துணைக்காவலாக, நாங்கள் மட்டும் பட்டணத்தில் வசித்தோம். சட்டப் பரீக்ஷையில் நான் தவறியது என்குடித்தனத்தில் ஏற்பட்ட இந்த மாறுபாட்டால் தான் என்று உறுதியாய்க் கொண்டேன். ஏனெனில், கொஞ்சி விளையாடும் கட்டழகியான என் சிறு மனைவி என்னருகிலிருக்கும் போது, "டார்ட்ஸ்—பொல்லாப்புகள்," "ஈஸ்மென்ட்ஸ்—அண்டை நிலமேலுள்ள பாத்தியங்கள்,"

இம்மாதிரியான விஷயங்களை நிர்ணயிக்கும் சட்டத்திட்டங்கள்; என் புத்திக்ககப்படாத வழியோடலாயின.

மேலும், ராணிப்பாட்டி, சளசள வென்று கூக்குரலிட்ட போதிலும், என் மனைவிக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதில் தினம் கொஞ்ச நேரம் செலவிட ஆரம்பித்தேன். என் மனைவி தமிழ் எழுத்துக்களையும் ஆங்கில எழுத்துக்களையும் இரண்டு மாதத்தில் கற்றுக்கொண்டாள். ஒரே காலத்தில் இரண்டு பாஷைகளையும் அவளுக்குச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். குறள், கம்பராமாயணம், ஷேக்ஸ்பியர் நாடகங்கள், பைரன், டெனிஸன் இவர்களின் பாடல்கள், என்னிடமிருந்த மற்றப் புஸ்தகங்கள்—இவைகளை எல்லாம் அவள் தானாகவே வாசித்தறியும் சக்தியுள்ளவளாகும் வரையில், போதுமென்று சும்மா இருக்கக் கூடாதென நான் நிச்சயித்துக் கொண்டேன். சகல விஷயங்களுமடங்கிய புதுமையான கற்பனுமுறை ஒன்றை நான் கண்டு பிடித்தேன். இலக்கணமும், இலக்கியமும் கைகலந்து சென்றன. ஆனால் அவள் படிப்பின் முதலாண்டு முடியும்போது, அவ்விரண்டு பாஷைகளிலும், கண்ஜாடை கொண்டுபேசும் ஊமைப் பாஷையிலும் "காதலிக்கிறேன்" என்ற வினை முற்றின் விகாரங்களை மட்டுமே நான் அவளுக்கு படிப்பிக்க முடிந்தது என்பது துலங்கிற்று. முன் கூறிய வாறு, என் சொந்தச் சட்டப் பரீக்ஷையில் நானும் 'பிளாங்கி' யானேன். என் மனைவியின் தேகக்கட்டு இயற்கையில் வெகு திடமானது. எனினும், அது நாளடைவில் தளர்ந்து விட்டது. தலைவலியின் உபத்திரவமும் கருப்பப்பையின் ஏதோ வலியால் மூர்ச்சையடைவதுமாக ஆய்விட்டது. ஆகவே அதிகப் பணம் செலவிட்டு அவளை ஐரோப்பிய வைத்தியரின் சிகிச்சையில் வைக்கவேண்டிவந்தது.

இந்தச் சமயத்தில், எனக்கு இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு சமீபித்து விட்டதாலும், அதற்குப் பின் சர்க்கார் உத்தியோகத்தில் புகமுடியாத தாலும், நான் சட்டப்பரீக்ஷை யில் செயித்து பட்டம் பெறலாம் என்று ஆசைவைக்க இட மில்லாததாலும், சர்க்கார்வேலையில புகுவது என்று தீர்மா னித்து, முன்கூடியே என் தகப்பனுரின் அனுமதியையும் பெற்று, என்னுடைய ஐரோப்பிய உபாத்தியாயர்களில் ஒரு வருடைய அருமையான சிபார்சியைக் கொண்டும், பி.எ. என்றும் "பி.எல்" இல் "பெயிலா" னவன் என்ற காரணங் கொண்டும், "போலீஸ் இன்ஸ்பெக்டர்" வேலை கற்றுக் கொள்ளும் உத்தியோகத்தை சம்பாதித்துக் கொண்டேன். ஜில்லாவின் முக்கியபட்டணமான ஒரு ஊரில், நல்ல அனு போகம் தரும் வேலைச்சமர்த்தருமான ஒரு "இன்ஸபெக்ட ரிடம்" முதலில், வேலைகற்றுக கொள்ளவென்று என்னை அனுப்பினர்கள். நோயாளியான என்மனைவியுடனும் கா வல்துணையான அந்தக்கிழவியுடனும், வைத்திய முறைகளை எழுதியதுண்டுக் காகிதங்கள் ஒரு கட்டையும், ஒரு பெட்டி நிரம்பப் பலவித மருந்துகளையும் எடுத்துக்கொண்டு என் வேலையை அவ்விடத்திற்கு ஒப்புக்கொள்ளப் புறப்பட்டுச் சென்றேன்.

(தொடரும்).

# கூடென்பெர்க்.
# Gutenberg.

(தொடர்ச்சி.)

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

மேலும் காதல் வசப்பட்டிருந்த இவர் வசந்தகாலத்தில் ஓய்வுநாட்களில் அந்நகரத்திற்கப்பாலுள்ள ஓர் சிங்கார வனத்தில் உட்கார்ந்து தன் காதலியை நினைத்துப் பாடுவதும், சில சமயங்களில், மரப்பட்டைகளின்மீது தன் பெயரையும் தன் காதலியின் பெயரையும் பன்முறை எழுதிப் பார்த்துக் களிப்புறுவதும் வழக்கமாம். ஒருநாள், ஈரம் நிறைந்த ஓர் இளம் பட்டையின்மீது தம்மிருவர் பெயரையும் தன் காதலிக்குக் கொடுக்குமாறு எழுதி, இதைத் தன்னிடமிருந்த பதப்படுத்திய தோற்கடுதாசி (Parchment) ஒன்றுடன் சேர்த்துக் கட்டித் தன் வீட்டிற்கு வந்தார். மறுநாட் காலையில், தன் காதலியிடம் போகத் தயாரிக்கையில், மேற்கூறிய பட்டையை யவிழ்த்துப் பார்க்கவே, தான் பசும்பட்டையி லெழுதியவை தோற்கடுதாசியில் ஸ்பஷ்டமாய்ப் படிந்திருப்பதைக் கண்டவுடன் அடக்கமுடியாத ஆனந்தங் கொண்டனர். உடனே, இவ்விதத்தில் புத்தகங்களும் எழுதப்படலாமென நினைத்துப் பெரிய பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கி, மேற்சொல்லிய பட்டை ரசத்திற்குப் பதிலாக கறுப்பு மையை அப்பலகையின்மீது தடவி அச்சடிக்கப் பிரயத்தனித்தார்.

ஏனையோர்க்கு இது ஓர் சாமான்யவிஷயமாகத் தோற்றலாம். இச்சாமான்ய விஷயங்களைக் கவனித்து ஊகித்தறிந்து

பெரிய வித்தைகளாக மாற்றுபவரன்றோ பெரியோரென மதிக்கப்பட்டுவருகின்றனர். மரத்தினின்று பழம் கீழே விழுவதும்; எரியும் அடுப்பின்மீது ஜலம் நிரம்பிய மூடிபாத்திரம் ஒன்றை வைக்கவே, நீர் சுட்டுப் பொங்குகையில், அப்பாத்திரத்தின் மூடி எழும்பியாடுவதும்; காற்றாடி உயரப் பறக்கையில், அப்பட்டத்தின் நூலின் மேற்பாகம் நனைந்து ஓர்வித உணர்ச்சியை உண்டுபண்ணுவதும்; யாவரும் பார்த்து அநுபவித்தவையானாலும், சில நுண்ணறிவினர் தோன்றி அவைகளிலிருந்து இயற்கை அற்புதங்களை ஊகித்துப் பார்த்தறிந்து ஆகருஷண சக்தியின் வல்லமையையும், நீராவி இயந்திரங்களையும், மின்சாரத்தையும் இவைகளின் உபயோகங்களையும் கண்டுபிடித்தனர். உற்று ஆலோசித்துப் பார்ப்பதுடன் தளர்வடையாத ஊக்கமும், உழைப்பும், சலிக்காத மனவுறுதியும் தன்னம்பிக்கையும் அத்தியாவசியமானவை. இக்குணாதிசயங்களைப் பரிபூரணமாகப் பெற்று, தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் நல்வழிகளிற் செலுத்தி உழைத்த மன்பதைக்கு மறக்கக்கூடாத பேருதவி புரிவர்களன்றோ மேன்மக்களெனப்படுவது.

பின், பற்பல அச்சுக்களைச் செதுக்கியெடுத்து இயந்திரத்தின் உதவியைக் கொண்டு அவைகளை ஒருங்குசேர்த்து, பெரும் புத்தகங்களைச் சிறு அளவில் பதிப்பிப்பதற்கான முறைமைகளைப்பற்றிப் பரியாலோசிக்கத் தொடங்கினர். பற்பல பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்குவதும், மையைத் தடவி அச்சடித்த காகிதங்களை வெளிப்படுத்துவதும் எழுத்துக்களைத் தனித்தனியாகச் செதுக்கி எடுத்து வேண்டியபடி அவைகளைக் கோத்துப் பற்பல இலக்கியங்களைப் பிரசுரிப்பதற்கான வழிகளைப்பற்றி விசாரித்தறிவதும் வழக்கமாம். புதையல் கிடைத்த பாக்கியன் அதை ஓர் ஒளிவான இடத்தில் பத்திரப்படுத்திவைக்கும் வரையிலும்

எங்ஙனம் ஓய்வும் உறக்கமும் இல்லாது அவதிப்படுவனோ, அங்ஙனமே இவரும் தன்னுடைய நிலைமதிக்கக்கூடாத, அல்லது பொருட் செல்வத்திற்கு ஆதாரமும் கல்விச் செல்வத்தைப் பெருக்குவதுமான அச்சுவித்தையை ஒரு நல்ல இடத்தில் ஸ்தாபித்துப் பூரண நிலைமைக்குக் கொண்டுவரும்படி முயன்றுவர்தார்.

கணக்கிடக்கூடாதபடிப் பலதிறப்பட்ட புத்தகங்களால் இவ்வுலகம் நிரப்பப்படுவதற்கான நற்காலம் உதித்துவிட்டது. இதுவரையிலும் நம்முடைய சிரசிலும் நாவிலும் பதுங்கிக்கொண்டிருந்த எண்ணங்களும் வாக்குகளும் விடுதலைபெற்று நமக்குவேண்டிய சமயங்களிலெல்லாம நம் கண்முன் தோன்றி நம்மைத் தூய்மைப்படுத்தி உயர்த்துவதற்கான காலம் பிறந்து வளரவாரம்பித்தது.

ஹார்லெம் நகரத்தைவிட்டு ஸ்விட்ஸெர்லாண்டுக்கு வந்து, மர அச்சுக்கள் செய்து அவைகளைத் தன்னிஷ்டப்படி ஓர் நூலிற்கோத்து நூல்முடிகளால் அவ்வச்சுக்களை வரிசை தவறாதபடிப் பலப்படுத்தி, முதலில் ஒரு பக்கம் அச்சடித்துப் பார்த்தனர். இவ்விதம் பன்முறை அப்பியசித்து வருகையில் நித்திரையில் ஆழ்ந்தனர். துயிலுகையில், இரு தொனிகள் உண்டாகி, அவைகளில் ஒன்று,"இதுமுதல் அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்த பெருமானாகவும், இதனால் மன்பதையின் தெய்வமாகவும், கல்வியின் தந்தையாகவும், நாகரீகங்களின் தோழனாகவும் நீ விளங்குவாய். உன்னுடைய பெருமை என்று மழியாது இப்பூவுலகில் நின்று நிலவும் ......" எனப் புகழ்ந்து கூறிற்றும். இரண்டாவது தொனியோ,"அச்சியந்திரத்தின் காரணத்தால் சந்தேக விபரீதங்கள் தோன்றி, நன்மை தீமைகளின் வரம்புகளற்று, நன்மை தீமையாகவும் தீமை நன்மை

யாகவும், சுசிலர் கடையராகவும் பூரியர் பெரியோராகவும் மாறி நடித்துவரவே, கொலை களவு போர் ஏக்கம் வலி வருத் தம் காமம் முதலானவைகள் பேர்கிளம்புமாதலாலும், பெண் கள் பெண்மையையும் ஆண்கள் ஆண்மையையும் இழப்பார்க ளாதலாலும், மோசக்காரர்கள் அல்லது வேஷதாரிகள் அதிகப் படுவார்களாதலாலும்'', அவ்வித்தையை இவர் மேற்கொண்டு விருத்திசெய்யப் பிரயத்தனிக்கக் கூடாதெனக் கூறிற்றும். ஐயம் குழப்பம் துக்கம் என்பனவற்றால் பீடிக்கப்பட்டுச் சற்றுத் தயங்கினர். எனினும் பின் மனந்தெளிந்து, தன் வித்தையின் பலன் யாதாயினும் அதைப் பொருட்படுத்தாது, அவ்வித்தையை முன்கொணரவே இவர் உழைத்துவந்தார். இதற்காக ஓர் தொழிற்சாலை யேற்படுத்தித் தொழிலாளிகளை நியமித்துத் தன் உள்ளக் கருத்தை நிறைவேற்ற வேண்டுமென எண்ணி இதற்குவேண்டிய பொருள் தன்னிடமில்லாமையி னல், பல தனவான்களை யணுகி உதவிபுரியும்படி இவர் வேண் டினர். இவரை அம்மூடர்கள் ஓர் உன்மத்தனெனப் பாவித் துப் பரிகசித்தனரேயல்லாது, இவர்க்கு வேண்டிய உதவி புரியவில்லை. பின் சில தொழிலாளிகளுடன் கூடிப் பகல் முழுதும் வைரம் கண்ணாடி முதலானவைகளைச் செதுக்கிச் சரிப்படுத்திக்கொண்டும், தங்கம் வெள்ளி இரும்பு முத லான உலோகங்களை உருக்கிப் பற்பல சாமான்கள் செய்து கொண்டு, வேலைக்காரர்கள் சென்றவுடன் இரவில் தன் அறைக்குட்சென்று, தக்க ஆயுதங்களைக்கொண்டு இரும்பு எஃகு முதலானவைகளிலிருந்து அச்சுக்களைச் செதுக்கி எடுத்துப் பக்கம் பக்கமாக அச்சடித்துப் பார்த்துக்கொண்டும் இருப்பது வழக்கம். சகல வேலைகளையும் இவர் தானேசெய்ய முடியாமையால், பிறர் சகாயத்தை விரும்பி அவர்களுக்கும் தன் வித்தையின் மர்மங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக்

கற்பிக்க நேர்ந்தது. இச்சமயத்தில், இவருடைய கூட்டாளிகள் இவர்க்கு மேற்கொண்டு பணங்கொடுத்து உதவமுடியாதெனக் கூறியபொழுது, தன்னுடைய நோக்கம் கைகூடிவருஞ் சமயத்தில் அவர்கள் தடுப்பது நியாயமல்லவெனக்காட்டித் தனக்கு அவர்கள் தக்கவிதத்தில் உதவவேண்டுமென வேண்டினர். இவருடைய நூதன வித்தையை இவர் தங்களுக்கு முற்றிலும் கற்றுக்கொடுத்து, பின் இதினின்று உண்டாகும் லாபத்தையும் கீர்த்தியையும் தங்களுக்கே அளித்துவிடுவதாக இவர் பிரமாணஞ் செய்தால் தாங்கள் இவர்க்கு உதவிபுரிவதாகச் செப்பினர். எவ்விதத்திலாயினும் தன்னுடைய வித்தை பரவவேண்டுமென விரும்பி, மேற்கூறியவற்றிற்கு உடன்பட்டு வேலைசெய்து வந்தார். காலாவிர்த்தியில், இவருடைய கூட்டுக்காரர்கள் இவரைத் தம்முடைய ஊழியக்காரர்களிலொருவராகப் பாவித்து அவமதித்து, இவர் வித்தையிலிருந்து உண்டான ஊதியத்தைத் தாம் கைப்பற்றி இவரைக் கைவிட்டார்கள். கிரிஸ்டொபெர் கொலம்பஸ் (Christopher Colombus) என்ற மகான் தன்னுடைய சுய ஊகவூக்கங்களினால் அமெரிக்கா கண்டத்தைக் கண்டுபிடித்தபின் பொறாமையும் பேராசையும் மிகுந்த அவருடைய வேலையாட்கள் பற்பலப் பொய்க்குற்றங்களை அவர்மீது சுமத்தி, அவரைச் சிறைப்படுத்திச் சுதேசத்திற்குக் கொண்டுசென்றது போலாயிற்று. இஃதுடன் நிற்காது இவருடைய கூட்டாளிகளொருவனின் வார்சுகள் அச்சுவித்தை இவருடையதல்லவெனவும்; அதனின்று கிடைக்கும் லாபமும் அவ்வித்தையைக் கைக்கொண்டு செய்தற்கான உரிமையும் இவரைச் சேர்ந்தனவல்லவெனவும் வாதித்தார்கள். இதைத் தீர்ப்பதற்காக நியாயாதிபதியிடஞ் சென்றபொழுது, இவ்வித்தை தன்னுடையதென நிரூபிக்க அதைப்பற்றிய அந்தரங்க விஷயங்களையெல்லாம் இவர் வெளியிட நேரிட்டது. ஆயினும், இயன்றவரையிலும் அதின்

மர்மங்களை ஒளித்தார். கடைசியில், இவ்வழக்கு ஒருவாறு முடிந்தது.

பின், தன் தாய் நகரான மேய்ன்ஸுக்குத் திரும்பிவந்து தன் வித்தையின் முன்னேற்றத்திற்காக வேலைசெய்து வருகையில் வறுமையும் தாழ்மையும் இவரை எதிர்த்துக் கலக்கின. இத்தகையவைகளிலிருந்து தப்பி இனித்துச் சுகித்திருந்த பெரியோர் ஒருவருமில்லையன்றோ ? இவருடைய நகரில் செல்வர்களுக்கும் சாமான்னியர்களுக்கும் மீண்டும் விரோதங்கள் உண்டாகவே, இவர் அந்நகரினின்று வெளித்துரத்தப்பட்டார்.

சௌந்தரியமும், இனிமையும், பெருந்தகைமையும், விவேகமும் நிறைந்த ஆன்னெட் (Annette) என்ற மாதைக் காதலித்து மணந்தார். இவள் பெருங்குடும்பத்தைச் சேர்ந்தவளாயினும், தற்சமயத்தில் தரித்திரமென்ற பேயினால் நட்புக்கொள்ளப்பட்டு வருந்தியதை அவள் அசட்டைசெய்து, இவரையே விவாகித்து இவருடைய வாழ்வைச் சிறப்பிக்கவும், இவருடைய தூக்கம் நிறைந்த ஆயுளின் முன் அன்பு விசுவாசம் இன்பம் என்ற நக்ஷத்திரங்களை வைத்து இவரை ரமித்திருக்கச்செய்ய முயன்றது புகழத்தக்கதன்றோ? இதுவன்றோ பெய்யனுராகத்தின் குணாதிசயம் ? இவர்களுக்குப் பிறந்த குழந்தைகளெல்லாம் மரித்தன. பெரியோரின் வித்தையே அவருடைய ஆஸ்தி. மன்பதையே அவருடைய வார்சுகள்.

பின், ஸ்விட்ஸெர்லாந்துக்குச் சென்று ஓர் அச்சியந்திரசாலை யெழுப்பி விவிலிய (Biblical) நூற்களையும் இன்னுமேனைய புத்தகங்களையும் பிரசுரித்தார். இவ்விடத்தினின்றும் இவர் துரத்தப்பட்டபடியாலும், இவருடைய வேலையாட்கள் இவரை மோசித்து, அச்சுவித்தையை இவரிடமிருந்து பிடுங்கி இவரை அலக்ஷியஞ் செய்ததாலும் மறுபடியும் தன தாயகத்திற்கு வந்தனர். யாவராலும் கைவிடப்பட்டுப் பகைத்துத்

தூற்றி நாடுகள்தோறும் துரத்தப்பட்ட மகம்மது தீர்க்க தரிசிக்கு எவ்வாறு அவருடைய முதல் மனைவி உதவினளோ, அவ்வாறே இவருடைய மனைவியும் இவரைத் தேற்றிச் சமாதானப்படுத்தி உற்சாகத்துடன் மேன்மேலும் உழைக்கத் தூண்டினள்.

பின், பாஸ்ட் (Faust) ஷோபெர் (Schoffer) என்றவர்களுடன் சேர்ந்து 1457-ம் ஞு தேவாராதனைப் புத்தகத்தையும் (Psalter) கிறிஸ்துவமத நூற்களையும் பிரசுரித்தார்.

பின், இவர்க்கும் இவருடைய கூட்டுக்காரர்களுக்கும் சம்பவித்த கஷ்டநஷ்டங்களையும்; ப்ரென்சு மன்னவனை பதினோராவது லூயி (Louis XI) என்றவனால் இவர்கள் நன்கு ஆதரிக்கப்பட்டதையும்; நாள் செல்லச் செல்ல இவருடைய புதிய கூட்டுக்காரர்களும் இவரை வஞ்சிக்க நினைத்து ஏற்பாடுசெய்து தோற்றதையும்; இவரும் இவருடைய மனைவியும் மீண்டும் சுதேசத்தினின்று நீக்கப்பட்டதையும் எத்தகைய சுகமும் இன்பமும் அமைதியும் போஷணையுமில்லாது வருந்தி தேசசஞ்சாரஞ் செய்துகொண்டிருந்த ஐரோப்பிய கவிச்சக்கிரவர்த்திகளிலொருவரான தாந்தே அலிகீரி (Dante Alighiri) என்பவர்க்கு ஓர் சீமான் உதவியதுபோல், இத்தருணத்தில், இவரும் நாஸோ (Nasso) எனற நாட்டின் அதிபதியால் பராமரிக்கப்பட்டு வந்ததையும் விஸ்தரிக்காது விடுப்போம்.

இவர் தன்னுடைய அறுபத்தொன்பதாம் பிராயத்தில் விண்ணுலகமடைந்தனர். அவ்வித்தையாகிய அந்தகாரத்தைத் துரத்தி, விவேகம் ஞானம், அறம் என்றவைகளைச் சடுதியில் பரப்புவதற்கான மார்க்கத்தைக் கண்டுபிடித்து உழைத்த உத்தமனின் ஜீவசரிதம் இதுதான்.

# குறிப்புக்கள்.

# Notes.

## ஸ்நான அறைகளில் நாம் பாடுவதேன்.

## WHY WE SING IN BATH-ROOMS?

பொதுவாக நம்மவருள் பலருக்குத் தாங்கள் ஸ்நானம் செய்யும் பொழுது தங்களை யறியாமலே பாடத்தோன்றுகிறது என்பதை நாம் நன்கு அறிவோம். ஜட்காவண்டி, மாட்டுவண்டி, ரயில் வண்டி, மோடார் சைகில் முதலியவற்றில் ஏறிச் செல்லும்போதும், கட கட வென்று ஓடி ஒலிக்கும் பள்ளத்தாக்குகளிலுள்ள நீரோட்டங்களின் பக்கத்திலிருக்கும் போதும் அவ்வாறே பாடத் தோன்றுகிறது. இதற்குக் காரண மென்ன? அந்தந்தச் சமயங்களில் நமது சங்கீதஞானம் பெருகி வழிகிறது என்று சொல்லுதற்கிடமில்லை. மேற்கூறியவற்றுள் ஒன்றிரண்டு மனத்துக்குக் களிப்பைத் தந்து அதனால் உண்டாய மகிழ்ச்சியே பாட்டாக வெளிவருகிறது என்போமானால், மாட்டுவண்டியில் செல்லும்போது உடலுக்கு நோவு உண்டாகிறதே யன்றிப் பொதுவாக இன்பம் உண்டாவதில்லையே. ஆயினும் அப்பொழுதும் பாட்டுப் புறப்படுகிறதே.

இதற்குக் காரணம் என்ன வென்றால், ஓடும் நீரும், ஆடும் வண்டியும், ரயிலும், மோட்டாரும் ஓயாது ஒரே வகையான ஒலியை உண்டாக்கிவருவதால் அது பாட்டுக்குச் சுருதி போடுவதுபோலாகிறது. அந்த சுருதிக் கிசைய நமது மன

தில் ஒரு வகைக்கிளர்ச்சி உண்டாகி அதற்கு ஒத்த ஒலியை நாமும் உண்டாக்கும்படி நம்மைத் தூண்டுகிறது. இது நாம் அறிந்து நினைத்துச் செய்யும் காரியமல்ல. நம்மை யறியாமலே நாம் வெளியிலிருந்து வரும் ஒலியுணர்ச்சியைப் பெற்று அவ்வொலிக்கு ஒத்த உள நெகிழ்ச்சியை அடைந்து பாடக் கிளம்பிவிடுகிறோம்.

அதிகமாகக் காற்றுப்போக்கில்லாதவாசல் பெட்டிபோன்ற கோயில் பிராகாரங்களிலும், மரமடர்ந்து நெருங்கிய காட்டின் நடுவிலும், மலைகள் இருபுறமுமுள்ள பள்ளத்தாக்குகளிலும், ஜன்னல்கள் மூடிய வீட்டறைகளிலும் (ஸ்நாந அறையிலும்) பாடுவதற்குக் காரணம் என்ன வென்றால் இங்கெல்லாம் நமது ஒலி சுவர்கள்மீதும், மலைமீதும், மரங்கள் மீதும் தாக்கிப் பிரதிபலித்துப் பெருகுவதால் அதற்கு ஒருவிதக் காம்பீரியம் ஏற்படுகிறது. அது காதுக்குக் கேட்க நன்றாயிருக்கிறது. அதனால்தான் இத்தகைய இடங்களிலும் நமக்குப் பாடத் தோன்றுகிறது.

மேலும் அவ் அறைகள் பலவற்றில் காணப்படும் நீர்க் குழாய்களின் வழி வெளிவரும் நீர்முன் கூறிய சுருதியை ஒத்த ஒலியை உண்டாக்குகின்றது. ஆதலால் இவ் அறைகளில் இருவகைத் தூண்டுதல்கள் உண்டாகி நமது பாட்டை வெளியே இழுத்துவிடுகின்றன.

அ.

# அறிவுநூல் மொழிகள்.

# Scientific Terms.

மனோன்மணீயம் என்னும் நாடகமியற்றிய காலஞ்சென்ற பிரொபஸர் பி. சுந்தரம் பிள்ளை அவர்கள் M. A. எழுதிய நூற்றொகை விளக்கம் என்னும் நூலின் அனுபந்தத்தினின்று கீழே காணும் மொழிகளை எடுத்திருக்கிறது.

| | |
|---|---|
| Metaphysics (Philosophy) | தத்துவநூல் |
| Aesthetic Sensibility | அழகிற்கேற்ற மனோதருமம் |
| Association | வாசனை |
| " Laws of | வாசனா நியம விதிகள் |
| Beautitude / Bliss | பேரானந்தம் |
| Conation | அகங்காரம் |
| Consciousness | அறிவு, போதம், ஞானம் |
| " Conditioned | சிற்றறிவு, ஜீவபோதம் |
| " Impersonal / Universal / Unconditioned | பேரறிவு, திரிபுடிரகித ஞானம் |
| " Loss of | நிஷ்டை |
| Concentration (of attention) | சித்தை காக்கிரியம் |
| Co-existence (Uniform) | நியதசாஹசரியம் |
| Delicacy of sense | இந்திரிய சாதுரியம் |
| Duality Implied in Consciousness | துவித நாட்டம் |

| | |
|---|---|
| Continuum | கோசம் |
| ,, Ideation | விஞ்ஞான மயம் |
| ,, Presentation | மனோமயம் |
| Ego | அகம், தான் |
| Emotion | சித்தம் |
| Emotions (Considered as subjectively subjective) | ஆனந்தமய கோசம் |
| Attitude (Objective) | அகமுகப் பார்வை |
| ,, (Subjective) | வெளிமுகப் பார்வை |
| Feeling | இச்சா ஞானம் |
| Being, Pure | இருக்குகை |
| Habit | பழக்கம் |
| Hypnotism (Psychical art) | யோககலை |
| ,, (Alert State in) | வசீகர ஜாக்கிரம் |
| ,, (Intermediate state in) | வசீகர சொப்பனம் |
| ,, (Deep state in) | வசீகர சுழுத்தி |
| ,, (Self) | கரும யோகம் |
| Hypnotic Sleep | வசீகர நித்திரை |
| Ideation and Comparison | புத்தி |
| Idea (Fundamental active principles) | தத்துவம் |
| Intelligence, Animal | புலனறிவு |
| Illusion | பிராந்தி |
| Illusory transfer of the sense of self | தாதான்மியம் |
| Identity, Sense of Personal | அகம் புத்தி |

| | |
|---|---|
| Inherent tendency | இயற்கைப் பக்குவம் |
| Knowing, Pure | தோற்றுகை |
| ,, Subject | திரிபுடி |
| Knowledge, (Departments of Human) | பொது நூல் |
| ,, Organised | நூல், சாத்திரம் |
| ,, Phenomenal | சிற்றறிவு, ஜீவபோதம் |
| Mental Modification | விருத்தி, அந்தக்கரண பரிணாமம். |
| Mind | உளம், அந்தக் கரணம் |
| Moral Purity | காரண சுத்தி |
| Nerve Modification | பிராணி விகாரம் |
| Non-ego | பிறர், இதம் |
| Organised ancestral experience | இப்பிறப்பிலடையாப் பழக்கம் |
| Phenomena—Objective | பாஹிய விஷயம் |
| ,, Subjective | அந்தர விஷயம் |
| Psychology | உள நூல் |
| Psychical Art | யோக கலை. |
| Sensation & Perception | மனம் |
| Sense Impression | புலனறிவு |
| Somnambulism | சஞ்சார நித்திரை |
| Union with the absolute | ஞானயோகம் |
| Theology | மத நூல் |
| Thought reading | பிறர் நினைவறிதல் |